NOOLAHAM FOUNDATION
நூலக நிறுவனம்

# காரைநகர் ஊர் சுவடிப்படுத்தல் செயற்றிட்டம்







www.noolaham.foundation

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | காரைநகர் ஊர் சுவடிப்படுத்தல் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | |
| செயற்றிட்ட இடம் | காரைநகர், யாழ்ப்பாணம் |
| செயற்றிட்ட காலம் | 12 மாதங்கள் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | |
| முக்கிய பங்குத்தாரர்கள் | |
| பாதீடு (Budget) | |

நூலக நிறுவனம் அறிமுகம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் சுவடிப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் சுவடிப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.


செயற்றிட்ட சுருக்கம்

ஊர் சுவடிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமானது நூலக நிறுவனத்தின் வீயூகதிட்டத்துக்கமைய அடையாளங்காணப்பட்ட முன்னெடுப்பு. ஒரு ஊர் தொடர்பான பல்வேறு தகவல் வளங்களை, தரவுகளை சேகரித்து, பாதுகாத்து, காட்சிப்படுத்தி அந்த ஊர் தொடர்பான கல்விசார் மற்றும் சமூகம் சார் ஆய்வுகளுக்கு உதவுவதுடன் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவுதல் இந்தச் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆய்வனுபவங்களின் அடிப்படையில், ஊர் தொடர்பில் சேகரிக்கப்படவேண்டிய தகவல்கள், தரவுகள் பற்றிய ஒரு சட்டகம் (வார்ப்புரு) உருவாக்கப்பட்டு. தகவல் வளங்கள், தரவுகள், ஒளிப்படங்கள், காணொளிகள், வாய்மொழி வரலாறுகள் முதலானவற்றை சேகரிக்கும் களப் பணிகள் ஊடாக ஒர் ஊரை சுவடிப்படுத்தல் தொடர்பான முறைமை உருவாக்கப்பட்டு மேற்கொள்ளப்படும்..

இவ்வாறு உருவாக்கப்பட்ட வளங்களை நீண்ட காலம் பயன்படக் கூடிய வகையில் பாதுகாத்துப் பகிர்வதற்கான சுவடிப்படுத்தல் முறைகளையும் நாம் உருவாக்கி கிழக்கிலும் வடக்கிலும் சில ஊர்களை தேர்தெடுத்து முன்மாதிரிச் செயற்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ், சைவம், கலாசாரம், பாரம்பரியம் என்பவற்றை கட்டிக்காப்பதில் முக்கிய பங்குவகிக்கும் பல ஊர்களின் வரிசையில் ஒன்றாக திகழும் காரைநகர் ஊரின் சிறப்பம்சங்களை சுவடிப்படுத்துவது அத்தியாவசியமானதொன்றாகும்

அறிமுகமும் பின்புலமும்




காரைநகர் என்னும் ஊரானது யாழ் நகரிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. காரைச்செடிகள் நிறைந்து உள்ளதனால் இத் தீவுக்கு காரைநகர் என்ற பெயர் உண்டானது என ஊரின் வரலாறு கூறுகிறது. காரை என்ற மூட் செடி காரைதீவின் வேலிகளில் இன்றும் காணலாம். முன்னோர்களுக்கு செய்யப்படும் சடங்குகளில் காரைச் செடியின் சிறுகிளையை பிராமணருக்கு வழங்குவது இவ்வூரின் வழக்கமாகும்.
காரைதீவு வடக்கு, மேற்கு திசைகளில் ஆழமான பாக்கு நீரிணையினாலும் கிழங்கு, தெற்கு திசைகளில் ஆழமற்ற வற்றும் தன்மையுள்ள பரவைக் கடலாலும் சூழப்பட்டுள்ளது. இத் தீவானது 26 km2 பரப்பளவை கொண்டது. இதன் சனத்தொகை 10,720 ஆகும். இங்கு வாழும் மக்களின் பிரதான வாழ்வாதரம் நெற்பயிர் செய்கை மற்றும் மீன் பிடியாகும்.

காரைநகரானது சைவம் வளர்க்கும் பல கோயில்களையும், அக்கோயில்கள் தொடர்பான சடங்குகள், பூஜைகள், தொன்மை வரலாறுகள், சமய நம்பிக்கைகள் போன்றவற்றினாலும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

காரைநகரை பிறப்பிடமாகக் கொண்ட பலரும் பல ஆண்டுகளுக்கு முன் தமிழ் மற்றும் சைவம் தழைத்தோங்கப் பங்களிப்பாற்றியுள்ளனர். அவ்வகையான சிறப்பு மிக்க ஊரான காரைநகர் தொடர்பான அரிய மற்றும் தொன்மையான தகவல்களை சேகரித்து தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு பயனளிக்கும் வகையில் அவற்றை சுவடிப்படுத்தி பாதுகாப்பது அத்தியாவசியமானதொன்றாகும்

செயற்றிட்டத்துக்கான நியாயப்பாடு

இலங்கையில் இலக்கிய சான்றுகளை கொண்ட இடங்களில் காரைநகரானது முக்கிய இடத்தை பெறுகிறது. இதற்கு ஒரு சான்றாக அகித்த ஜாதக் கதையை கூறலாம். இக் கதையில் காரைநகர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இது தவிர காரைதீவின் தொன்மையை பறைசாற்றும் விதமாக பல தொல்லியல் சான்றிதழ்களும் கிடைக்க பெற்றுள்ளன. இதற்கு உதரணமாக களபூமி, சந்திரத்தையில் இனங்காணப்பட்ட பெரும்கற்கால ஈம அடங்கல்களை கூறிப்பிடலாம். இவை கிறிஸ்துக்கு முற்பட்டவை ஆகும். இதனை யாழ்பல்கலைகழகம் மேற்கொண்டுண்டது. இதில் பேராசிரியர் இந்திரபாலா ஆரம்ப காலகட்ட ஆய்வுகளில் பங்கு பெற்றார். வேர்ப்பிட்டி இடிப்பாடுகள் பௌத்த காலத்தை சேர்ந்தது. இதில் ஒரு விகாரை இருந்தற்கான சான்றுகள் உள்ளன. கடல் வழியாக வருபவர்களுக்கு தொலைவிலே தெரியக்கூடியதாக இது காணப்படுகிறது. இவ்வாறு பல வரலாற்று மற்றும் தொல்லியல் ஆதாரங்கள் காரைதீவு தொடர்பாக உள்ளன. எனினும் காரைதீவின் சாதரண மக்களின் வாழ்வியல், சடங்குகள் மற்றும் நாட்டார் வழக்கங்கள் இன்னும் ஆய்வுக்கு உட்படுத்தப்படாமலே உள்ளன.

காரைநகரானது சைவத்தை வளர்க்கும் பல இந்து சமயக் கோவில்களை தன்னகத்தே கொண்டுள்ளது. காரைநகத்தின் புகழ் பாடும் ஈழத்துச் சிதம்பரம் கோவில், வியாவில் ஐயனார் கோயில், வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம், வலந்தலை மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம், களபூமி கரப்பிட்டியந்தனை கற்பக விக்கினேஸ்வரசுவாமி, பத்தர்கேணி வன்மீக விநாயகர் ஆலயம், துறைமுகம் பிள்ளையார் கோயில், காரைநகர் தங்கோடை புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் ஆலயம், களபூமி தன்னை சித்தி விநாயகர் ஆலயம், அண்டவேற் பிள்ளையார் கோயில், காரைநகர் மணற்காடு கும்பநாயகி அம்மன் ஆலயம், களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்மன் கோயில், வலந்தலை மடத்துக்கரை முத்துமாரி அம்மன் கோயில், நீலிப்பந்தனை துர்க்காதேவி ஆலயம், சிவகாமி அம்மன் கோயில், கிளுவனை மாதாங் கோயில், வலந்தலை கண்ணகி அம்மன் ஆலயம், தங்கோடை நாகம்மாள் ஆலயம், பலகாடு இராஜபுரம் இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம், முல்லைப்புலவு காமாட்சி அம்மன் கோயில், நாச்சிமார் கோயில் (வலந்தலை), தங்கோடை புளியங்குளம் மாதாங் கோயில், களபூமி காளி கோயில் போன்ற கோவில்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை.

ஈழத்துச் சிதம்பரமானது 19 ஆம் நூற்றாண்டு அமைக்கப்பட்ட புகழ் பெற்ற ஆலயமாகும். இங்கு எழுந்தருளிருக்கும் சிவன சுந்தரேசுவரர் என்றும் அம்பிகைக்குச் சௌந்தராம்பிகை என்றும் அழைக்கப்படுகின்றனர். இக்கோயில் தொடக்கத்தில் ஆண்டி கேணி ஐயனார் கோயில் என்றே அழைக்கப்பட்டது. ஐயனார் கோயிலை அமைப்பதிலே முன்னின்ற அம்பலவி முருகர் என்ற பக்தரே பின்பு சிவன் கோயிலை அமைப்பதிலும் முன்னின்றவர். இத்திருக்கோயிலில் நடைபெறும் உற்சவங்களில் மிகப் பிரசித்தி பெற்றது திருவெம்பாவை உற்சவமாகும். நடராஜர் இரதாரோகணமும் ஆர்த்திராபிஷேகமும் குறிப்பிடத்தக்கவை.

இது போன்ற பல நிகழ்வுகள் சிறப்பம்சம் வாய்ந்தவை இவ்வாறான தொன்மை வாய்ந்த கோவில்களின் வரலாறு மற்றும் பாரம்பரியத்தினை அழிவடையாது கட்டிக்காப்பாற்றும் வகையில் அவற்றை சுவடிப்படுத்துவது அவசியமாகும்.

காரைநகரானது பல எழுத்தாளர்களை மற்றும் பல ஆளுமைகளை உருவாக்கிய ஊராகும். இவர்களின் படைப்புகள் பற்றியும் இவர்கள் பற்றியும் சுவடிப்படுத்துதல் மிக அவசியமான ஒன்றாகும். இது தவிர பிரபல வானொலி மற்றும் தொலைகாட்சி பிரபலங்களும், வணிகர்களும் இவ்வூரை சேர்ந்தவர்கள். F.X.C.நடராஜா தமிழ் உலகும் கண்ட மரபுவழித் தமிழ் அறிஞரானர். இவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது.

சுப்பிரமணியர் அம்பலவாணர், காரைநகரை சேர்ந்த முத்த பத்திரிகையாளர் ஆவார். 'பேப்பர் சாமியார்' இவரை காரைதீவின் ஒரு சன்னியாசியாயும், ஞானியாராயும் காரைநகர் எல்லோரும் அறிந்து வைத்திருக்கிறார்கள்.'ரைம்ஸ்' சங்கரப்பிள்ளை, மிகப் பெரிய வர்த்தகர் ஆவார். இலங்கையின் சகல பாகங்களிலும் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் சிறைச்சாலைகளுக்கான கொந்தராத்துக்களைச் செய்த்தன் காரணத்தால் இவரை 'கொந்தராத்துச்' சங்கரப்பிள்ளை என்று அழைப்பர். . மகா தேசாதிபதியாக இருந்த இவர், மகாராணி இரண்டாம் எலிசபெத் இலங்கை வந்தபோது அழைத்த விருந்தினர்களில் ஒருவராக இருந்து கௌரவம் பெற்றவர். இவ்வாறு எண்ணில் அடங்காத கல்விமான்கள், வள்ளல்கள், நீதவான்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், பேராசான்கள், எழுத்தாளர்கள், ஆன்மீக வாதிகள் எனப் பல்வேறு துறைகளில் பிரசித்தி பெற்றவர்களை உருவாக்கிய ஊர் காரைதீவாகும்.

இவர்கள் தொடர்பாக சுவடிப்படுத்தி வைப்பதன் மூலம் இளைய தலைமுறைக்கு இவ் ஊர் தொடர்பாகவும் அதன் வரலாறு தொடர்பாகவும் அறியத்தர முடியும். இந்த ஊரில் எழில் கொஞ்சும் வயல்களும் கடற்கரைகளும் காணப்படுகின்றமை இந்த ஊருக்கு அழகையும் செழிப்பையும் வழங்குகின்றது.

இவ்வாறான அறிந்தும் அறியாமலும் காணப்படும் காரைநகர் ஊர் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து அவற்றை சுவடிப்படுத்துவதன் முக்கியத்தை நூலக நிறுவனம் அடையாளம் காண்பததோடு அவற்றை தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு பயனளிக்கும் வகையில் சுவடிப்படுத்துவதன் அவசியத்தையும் உணர்கின்றது.

இலக்குகளும் நோக்கங்களும்

காரைநகர் ஊர் சுவடிப்படுத்தல் திட்டமானது பின்வரும் இலக்குகளையும் நோக்கங்களைக் கொண்டுள்ளது

.

ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தலும் **(collecting and linking information sources and data about a village)** பண்பாட்டு பேணலுக்கும் வளர்ச்சிக்கும் வரலாற்று ஆய்வுக்கும் பயன்படக் கூடிய வகையில் சுவடிப்படுத்தல் **(documentation),** சுவடிப்படுத்தல் **(archiving),** அணுக்கப்படுத்தல் **(providing open access)**

1. வரலாறு மரபுரிமை தொடர்பான விழிப்புணர்வையும் மதிப்புணர்வையும் மேம்படுத்தி காரைநகர் ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தல்
2. காரைநகரின் வரலாற்றை தேடி அதனை சுவடிப்படுத்தி மக்களுக்கு வழங்கல்
3. காரைநகர் தொடர்பான வரலாற்று மற்றும் சமூக ஆய்வுகளுக்கான பாதை ஏற்ப்படுத்தி கொடுத்தல்.
4. காரைநகரில் உள்ள ஆளுமைகள் மற்றும் பிரபலங்களின் வாய்மொழி வரலாறுகளை ஒலிப்பதிவு செய்தல்.
5. ஊரின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அந்த ஊரின் முக்கிய வளங்களை (resources), அமைப்புக்களை (organizations), மனிதர்களை (people), தேவைகளை (needs) அடையாளம் கண்டு சுவடிப்படுத்தல்.
6. ஊரிலே இருக்கின்ற சமூக ஏற்றத்தாழ்வுகள், கலாசாரப் பன்மைத்தன்மை போன்றவற்றினையும் அவற்றினது வரலாற்றினையும் வெளிக்கொண்டு வருதல்.

செயற்பாடுகள்

- செயற்திட்ட வடிவமைப்பு (Project Design)

  பங்குத்தாரர்களின் உள்ளீட்டைப் பெற்று, ஒத்த செயற்திட்டங்ளை மீளாய்ந்து, செயற் திட்டத்தை செழுமைப்படுத்தல். இந்தச் செயற்பாட்டின் விளைவாக துல்லியமான செயற் திட்டம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளலாம் .

- சந்திப்புக்கள்/நிகழ்வுகள்/பயிற்சிப் பட்டறைகள்

  காரைநகர் வாழ் மக்கள் ஊடான சந்திப்புக்கள், நிகழ்வுகள் ஊடாகவே காரைநகர் தொடர்பான சுவடிப்படுத்தலை சாத்தியபடுத்தலாம். மேலும், காரைநகர் மக்களை அவர்கள் தொடர்பான சுவடிப்படுத்தலில் ஈடுபட வைப்பதும், அதற்கான ஆளுமையை கூட்டுவதும் இந்தச் செயற்திட்டத்தின் நோக்கங்களில் அடங்கும். அதற்கு பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குபடுத்தல், உள்ளீடு தன்னார்வலர்களை ஊக்கப்படுத்தல் போன்ற பணிகள் வலுச்சேர்க்கும்.

- தகவல் வளச் சேகரிப்பும் எண்ணிமப் பாதுகாப்பும் (Collection Development & Digital Preservation)

  காரைநகர் மக்களால் வெளியிடப்பட்ட காரைநகர் தொடர்பான தகவல் வளங்களை கண்டறிந்து, அனுமதி பெற்று, எண்ணிமப்படுத்தி, பாதுகாத்து, இணையம் ஊடாக வெளியிடல். குறிப்பாக எத்தனை வளங்கள் இவ்வாறு கிடைக்கும் என்பதை முன்கூட்டியே கணித்தல்

- களப் பணிகளும் பல்லூடக சுவடிப்படுத்தலும் (Field Work & Multimedia Documentation)

  களப் பணிகள் ஊடாக உருவாக்கப்படும் வளங்கள் process செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வெளியிடப்படும்.
    - பல்லூடகப் பதிவுகளைச் சேகரித்தல், எண்ணிமப்படுத்தல்
    - ஒளிப்படங்கள் எடுத்தல்
    - காணொளிப் படப் பிடிப்பு
    - வாய்மொழி வரலாறுகள்

- தரவுத் தொகுப்புகள் (Data Sets)

  மேற்குறிப்பிடப்பட்ட secondary மற்றும் primary தரவுச் சேகரிப்புக்களின் ஊடாகப் பெறப்படும் தரவுகளை கட்டமைப்பான தரவுகளாக (structured data) ஆக மாற்றித் தொகுத்தல்.
    - புள்ளிவிபரங்கள் (மக்கள் தொகையியல், கல்வி, நலம், பொருளாதாரம்)
    - இடங்கள்
    - இயற்கை வளங்கள்
    - தொல்லியல் களங்கள்
    - நபர்கள்
    - நிறுவனங்கள்

விளைவுகள்

| இலக்கு | நோக்கங்கள் | செயற்பாடுகள் | விளைவுகள் |
|---|---|---|---|
| ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தலும் **(collecting and linking information sources and data about a village)** பண்பாட்டு பேணலுக்கும் வளர்ச்சிக்கும் வரலாற்று ஆய்வுக்கும் பயன்படக் கூடிய வகையில் சுவடிப்படுத்தல் **(documentation),** சுவடிப்படுத்தல் **(archiving),** அணுக்கப்படுத்தல் **(providing open access)** | ஊரின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அந்த ஊரின் முக்கிய வளங்களை (resources), அமைப்புக்களை (organizations), மனிதர்களை (people), தேவைகளை (needs) அடையாளம் கண்டு சுவடிப்படுத்தல். | காரைநகர் வாழ் மக்களுடன் சந்திப்புக்களை மேற்கொள்வதோடு அங்கு நடைபெறும் நிகழ்வுகளில் பங்குபற்றி தகவல்களை சேகரித்தல் | காரைநகர் ஊர் தொடர்பான சுவடிப்படுத்தப்பட்ட விடயங்களை தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினர் பயன்படுத்துதல் |
| | வரலாறு மரபுரிமை தொடர்பான விழிப்புணர்வையும் மதிப்புணர்வையும் மேம்படுத்தி காரைநகர் ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தல் | காரைநகரின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகள், அமைப்புக்கள், நிறுவனங்கள், வளங்கள், நபர்களை அடையாளப்படுத்தி அவர்களிடம் காணப்படும் ஆவணங்கள் பெறுவதோடு பாரம்பரிய விடயங்களை பதிவுசெய்தல் | |
| | ஊரிலே இருக்கின்ற சமூக ஏற்றத்தாழ்வுகள், கலாசாரப் பன்மைத்தன்மை போன்றவற்றினையும் அவற்றினது வரலாற்றினையும் வெளிக்கொண்டு வருதல் | காரைநகரில் வாழ்கின்ற பல்வேறு வகைப்பட்ட மக்களுடன் தொடர்புகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்தி சுவடிப்படுத்தல் செயற்பாட்டை மேற்கொள்ளுதல் | |

எதிர்பார்க்கப்படும் சவால்களும் தீர்வுகளும்

- அனுபவம் மிக்க மற்றும் தொடர்ந்தும் நூலகத்துடன் இணைந்து பணியாற்றத்தக்க கள ஆய்வாளரை அடையாளம் காணுதல் சவாலாக அமையலாம். நீண்ட கால பணியாளர் இருக்கையை உறுதி செய்யும் வகையிலும் அவரின் கல்வி தகைமை கள அனுபவத்தின் அடிப்படையிலும் அவருக்கான சலுகைகள் மறுபரிசீலனை செய்ய ஆலோசிக்கலாம்

- காரைநகரின் நீண்ட காலம் வாழ்ந்த நபர்கள் பல்வேறு இடங்களுக்கும் புலம்பெயர்ந்திருக்கலாம் என்பதனால் அவர்களை அடையாளம் காண்பது சவாலாக இருக்கலாம். அவர்கள் தொடர்பான விபரங்களைச் சேகரித்து புலம்பெயர் நாடுகளிலுள்ள காரைநகர் சங்கங்களினூடாக தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

எதிர்பார்க்கப்படும் பாதீடு
**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**